# மோகனூர் வட்டார வளர்ச்சி அலுவலரின் (கி.ஊ) நடவடிக்கைகள்
## முன்னிலை திருமதி.ஆர்.தேன்மொழி

ந.க.எண்.தி5/3822/2021 நாள். 26.11.2021

பொருள் : அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017 – நாமக்கல் மாவட்டம், மோகனூர் ஊராட்சி ஒன்றியம் – இராசிபாளையம் ஊராட்சி, சர்வே எண்கள். 145/1B1,144/2C,1D,2D-ல் 2.24 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டது - விற்கப்படாத அனுமதியற்ற மனைகளை முறைப்படுத்துதல் மற்றும் அங்கீகாரம் வழங்குதல் ஆணை – வெளியிடப்படுகிறது

பார்வை :
1) அரசாணை எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்: 04.05.2017.
2) அரசாணை எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (UDE 4(3) த்துறை நாள்:13.10.2017.
3) அரசாணை (நிலை) எண்.55, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை (ந.வ.4(3)), நாள்:02.05.2018
4) அரசாணை (நிலை) எண்.21, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை (ந.வ.4(3)), நாள்:05.02.2019
5) அரசாணை எண்.100, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை (ந.வ.4(3))த் துறை, நாள்:01.07.2019
6) நகர் ஊரமைப்பு ஆணையர் , சென்னை–2 அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண்.13193/2017/எல்எ2, நாள்:30.10.2017, 31.10.2017,07.11.2017,17.11.2017 மற்றும் 20.12.2017
7) திரு.M.P.திருவள்ளுவன், சென்னை, என்பவரின் இணையவழி விண்ணப்பம் எண்.DTCP/L/0839035/2017, நாள்:12.02.2021
8) நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2847/2021/நாமா,நாள்.28.10.2021
9) இவ்வலுவலக வட்டார வளர்ச்சி அலுவலரின் (கி.ஊ) நேரடி தலஆய்வு நாள்– 17.11.2021
10) திரு.M.P.திருவள்ளுவன், சென்னை, என்பவரின் சலான் நாள்.25.11.2021

*****

ஆணை

நாமக்கல் மாவட்டம், மோகனூர் ஊராட்சி ஒன்றியம், இராசிபாளையம் ஊராட்சி, சர்வே எண்கள். 145/1B1,144/2C,1D,2D-ல் 2.24 ஏக்கர் பரப்பளவு இடத்தில் வீட்டுமனைகள் ஏற்படுத்தி முறையான அங்கீகாரம் இல்லாமல் வீட்டுமனைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. பார்வை(1) மற்றும் (2)–ல் காணும் அரசாணைகளில் அங்கீகாரம் இல்லாத வீட்டுமனைகளை வரன்முறைப்படுத்திக் கொள்ள வழிகாட்டி நெறிமுறைகள் வழங்கப்பட்டதை தொடர்ந்து பார்வை 7–ல் காணும் ஆன்லைன் விண்ணப்பம் வாயிலாக இராசிபாளையம் ஊராட்சி, சர்வே எண். 145/1B1,144/2C,1D,2D-ல் அமைந்துள்ள வீட்டு மனைகளுக்கு அங்கீகாரம் வழங்கிட கோரி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளதையடுத்து பார்வை 7–ல் காணும் ஆன்லைன் விண்ணப்பம் ஏற்கப்பட்டு பார்வை 8–ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் ஒரு சில நிபந்தனைகளின்படி அனுமதியற்ற மனைப்பிரிவினை வரன் முறைப்படுத்தி கொள்கை அளவிலான மனைப்பிரிவு ( In Principal approval of Layout Frame work ) ம.(வரன்முறை)/நாமா எண்.79/2021 என எண்ணிடப்பட்டு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

2) வீட்டுமனையிடங்களாக பிரிக்கப்பட்ட 44 மனையிடங்களில் 15 மனையிடங்கள் மட்டும் மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கும் முன்னரே விற்பனை செய்யப்பட்டுள்ளது. வீட்டுமனைகள் பல்வேறு தேதிகளில் பல்வேறு ஆவண பதிவு வாயிலாக விற்பனை செய்ததன் மூலம் நில உடமை (Title of ownership) மாறிவிடுவதால் மேற்கண்ட மனையிடங்களை வாங்கியவர் தனியே விண்ணப்பித்து மனையிடத்தை முறைப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதால் எஞ்சியுள்ள விற்பனை செய்யப்படாத 53029.67 சதுர அடி பரப்பளவில் உள்ள 29 மனையிடங்களும் விற்பனை செய்த 15 மனையிடங்களையும் கொள்கை அளவில் வரன்முறைப்படுத்தி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

3) மேலும், நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் செயல்முறையுடன் இணைத்து வரப்பெற்ற மனைப்பிரிவுகளுக்கான வரைபடம் முழுமையாக பரிசீலனை செய்து வீட்டுமனைபிரிவு வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் குறித்து பிரஸ்தாப இடத்தினை வட்டார வளர்ச்சி அலுவலரால் (கி.ஊ) நேரில் ஆய்வு செய்யப்பட்டது. வரைபடத்தில் சாலைகளுக்காக 22344.73 ச.அடி மற்றும் பூங்காவிற்காக 5360ச.அடி ஒதுக்கப்பட்டுள்ளது. மோகனூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.2342/2021, நாள். 18.10.2021ன் படி 22344.73 ச.அடி சாலைகளுக்காகவும், 5360 ச.அடி பூங்காவிற்காகவும் (மனை எண். 2,3,14,15 ) நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநருக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது.

4) விற்பனை செய்யப்படாத 29 மனைகளில் தற்போது 25 மனைகளுக்கு கீழ்கண்ட பட்டியலில் காணும் விவரப்படி 4459.74 சதுர மீட்டருக்கு வரன்முறைகட்டணம் (ஒரு சதுர அடிக்கு ரூ. 45/– வீதம்) ரூ.2,00,688/– (ரூபாய் இரண்டு இலட்சத்து அறுநூற்று எண்பத்தி எட்டு மட்டும்) ஐ உரிய அரசுத் தலைப்பிலும், வளர்ச்சி கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு ரூ.25/– வீதம்) ரூ.1,11,494/– ( ரூபாய் ஒரு இலட்சத்து பதினோராயிரத்து நானூற்று தொன்னூத்தி நான்கு மட்டும் ) ஐ LAYOUT DEVELOPMENT CHARGES என்ற வங்கிகணக்கில் (கனரா வங்கி, மோகனூர் கணக்கு எண்.1211101028720) செலுத்தப்பட்டு இவ்வலுவலகத்தில் சலான் ஒப்படைப்பட்டுள்ளது.

5)எனவே இராசிபாளையம் ஊராட்சி, சர்வே எண்கள். 145/1B1,144/2C,1D,2D-ல் அமையும் 2.24 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவில் வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படாத 25 மனைகளுக்கு கீழ்கண்ட விபரப்படி கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

| வரிசை எண் | மனையிட எண் | மனையின் பரப்பளவு (சதுர மீட்டர்) |
|---|---|---|
| 1 | 1 | 193.70 |
| 2 | 16 | 193.70 |
| 3 | 22 | 115.20 |
| 4 | 23 | 115.20 |
| 5 | 24 | 115.20 |
| 6 | 25 | 213.02 |
| 7 | 26 | 213.02 |
| 8 | 27 | 212.57 |
| 9 | 28 | 211.76 |
| 10 | 29 | 241.55 |
| 11 | 30 | 240.80 |
| 12 | 31 | 240.15 |
| 13 | 32 | 239.69 |
| 14 | 33 | 105.82 |
| 15 | 34 | 91.62 |
| 16 | 35 | 108.42 |
| 17 | 36 | 87.57 |
| 18 | 37 | 196.02 |
| 19 | 38 | 198.35 |
| 20 | 39 | 200.67 |
| 21 | 40 | 202.99 |
| 22 | 41 | 179.67 |
| 23 | 42 | 181.28 |
| 24 | 43 | 181.72 |
| 25 | 44 | 180.05 |
| | மொத்தம் | **4459.74 ச.மீ** |

ஆகவே (1)இல் கண்டுள்ள அரசாணையின்படி விற்கப்படாத மொத்தம் 25 மனைகளுக்கு (இருபத்தி ஐந்து மனைகள் மட்டும்) கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

1 வீட்டுமனைபிரிவுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள சாலைகளில் தற்போது நிலையிலேயே இருக்க வேண்டும் எவ்வித மாற்றங்களும் ஏற்படுத்தக்கூடாது.

2 மனைபிரிவு வரைபடத்தில் பிரிக்கப்பட்டுள்ள மனை நில அளவுகளின் விவரங்களை இவ்வலுவலக அனுமதியின்றி மாற்றி அமைத்தல் கூடாது.

3 வரன்முறை செய்து வழங்கப்படும் மனைப்பிரிவுகளில் வீடுகள் மட்டும் கட்டுவதற்கு பயன்படுத்த வேண்டும். அபாயகரமான மற்றும் அருவருக்கதக்க தொழிற்சாலைகள் ஏதும் ஏற்படுத்திட அனுமதியில்லை.

4 மனுதாரர் செலுத்தியுள்ள கட்டண விகிதங்களில் வேறுபாடுகள் ஏதுமிருந்து, கட்டணம் செலுத்த வேண்டியிருப்பின் அதனை மனுதாரர் செலுத்த வேண்டும்.

5 ஒவ்வொரு மனைபிரிவும் பத்திர பதிவு செய்யும் போது, மனைப்பிரிவு அங்கீகார வரைபட நகலினை இணைத்து பத்திர பதிவு செய்திடவேண்டும்.

6 அரசின் கொள்கை அளவிலான மனைப்பிரிவு அங்கீகாரத்தில் அரசு மாற்றங்கள் எதேனும் செய்து உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டால் அந்த உத்திரவுகளுக்கு மனுதாரர் கட்டப்பட்டவராவர்.

7 பத்திர பதிவுகள் மற்றும் நில உடமை மாற்றங்களில் ஏற்படுத்தப்படும் சிவில் வழக்குகளுக்கு மனுதாரரே முழு பொறுப்பாவார்.

8 திறந்த வெளி இடத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலத்தின் வாயிலாக மனுதாரரால் விற்பனை செய்யப்பட உள்ள மனைநிலங்களுக்காக உயர் அழுத்த/சாதாரண மின் அழுத்த மின்சார லைன்கள் அமைத்து மின்சார வசதிகள் செய்து கொள்ள அனுமதியில்லை.

மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளை மீறினால் மனைப்பிரிவு அங்கீகாரம் ரத்து செய்திட ஏதுவாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் விற்பனை செய்யப்பட்ட வீட்டுமனை பிரிவிற்கு உரிய நபர்கள் தனித்தனியே விண்ணப்பிக்கும் பட்சத்தில் இறுதிவரன்முறை அங்கீகாரம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு:மனைப்பிரிவு வரைபடம் –1

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
மோகனூர் வட்டாரம்

பெறுதல்

திரு.M.P.திருவள்ளுவன்,
த/பெ.பிரமநாதன்,
F6C,CDS Regal Palm Garden,
383,வேளச்சேரி,
தாம்பரம் ரோடு,விஜயா நகர்,
வேளச்சேரி,
சென்னை-600 042.

நகல்

1) ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), நாமக்கல் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2) நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல்
3) சார்பதிவாளர், மோகனூர், நாமக்கல் மாவட்டம்.
4) உதவி இயக்குநர்(நில அளவை), நாமக்கல் மாவட்டம்.
5) ஊராட்சி மன்றத் தலைவர், இராசிபாளையம் ஊராட்சி, மோகனூர் வட்டாரம்.

# உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் நடவடிக்கைகள்

## முன்னிலை. திருமதி.ஆ.மணிமேகலை, பி.இ.,

ந.க.எண். 2847/2021 நாமா

நாள்.28.10.2021.

பொருள் : அனுமதியற்ற மனைப்பிரிவு – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – நாமக்கல் மாவட்டம் – மோகனூர் வட்டம்/ ஊராட்சி ஒன்றியம் – இராசிபாளையம் ஊராட்சி/ கிராமம்– சர்வே எண்கள்.145/1B1, 144/2C,1D,2D–ல் 2.24 ஏக்கர் பரப்பில் அமையும் அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :

1. அரசாணை (நிலை) எண். 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். 04.05.2017
2. அரசாணை (நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். 13.10.2017
3. அரசாணை (நிலை) எண். 55 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். 02.05.2018.
4. அரசாணை (நிலை) எண்.21 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். 05.02.2019.
5. அரசாணை எண்.100 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (ந.வ.4(3))த் துறை நாள்.01.07.2019.
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டு நெறிமுறை ந.க.எண். 13193/2017/LA2 நாள். 30.10.2017, 31.10.2017, 07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017.
7. மனுதாரர் Thiru.M.P.Thiruvalluvan, சென்னை அவர்களின் ஆன்லைன் எண்.DTCP/L/0839035/2017, நாள். 12.02.2021.
8. இவ்வலுவலக கடிதம் இதே எண், நாள்.11.10.2021.

**********

உத்தரவு:

பார்வை 1, 2, 3, 4 மற்றும் 5–ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை 6–ல் கண்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படியும் பார்வை 7–ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு பார்வை 8–ல் கண்ட கடிதத்தினை தொடர்ந்து கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம்/ஊராட்சி ஒன்றியம், இராசிபாளையம் ஊராட்சி/கிராமம், சர்வே எண்கள்.145/1B1, 144/2C,1D,2D–ல் 2.24 ஏக்கர் பரப்பில் அமையும் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ(வரன்முறை)/ நாமா எண்.79/2021 என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | : | 2.24 ஏக்கர் அல்லது 97574.40 ச.அடி |
| சாலைகளின் மொத்த பரப்பு | : | 22344.73 ச.அடி |
| ஏற்கனவே ஒதுக்கப்பட்ட பொது உபயோகம் | : | 0.00 ச.அடி |
| மொத்த மனைகள் | : | 44 எண்ணம் |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : | 15 எண்ணம் |
| விற்கப்பட்ட மனை எண்கள் | : | 4-13 மற்றும் 17-21. |
| விற்கப்பட்ட மனைகளின் பரப்பளவு | : | 22200.00 ச.அடி |
| விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | : | 29 எண்ணம் |
| விற்கப்படாத மனைகளின் எண்கள் | : | 1,16, மற்றும் 22-44. |
| விற்பனை செய்யப்படாத மனைகளின் பரப்பளவு | : | 53029.67 ச.அடி |
| திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு | | |
| பூங்கா (மனை எண்கள். 2,3,14,15) | : | 5360.00 ச.அடி |

**செலுத்தப்பட வேண்டிய கட்டண விபரம்**

1) பரிசீலனை கட்டணம் :

| | |
|---|---|
| இணைய தளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/– வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விபரம் | மனை ஒன்றிற்கு ரூ.500/– வீதம் 09 மனைகளுக்கு ரூ.4,500/- செலுத்தப்பட்டுள்ளது. |

பரிசீலனை கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை இணையதளம் வாயிலாக செலுத்த வேண்டும்.

2) அனுமதியற்ற இம்மனைப்பிரிவுக்கு வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்தப்பட வேண்டிய உரிய கணக்குத் தலைப்பிலும் வளர்ச்சிக் கட்டணம் உள்ளாட்சியின் வங்கி கணக்கிலும் செலுத்தல் வேண்டும்.

அ) வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு

0217-Urban Development -60 Other Urban Development Schemes – 800 other Receipts – AT Receipts under Regularisation charges of Unapproved layout and Plots – DTCP 27 Non Taxation Fees – 30 Regularisation. DPC:0217-60-800-AT-2730

3) வரைபடத்தில் கண்டுள்ள OSR இடங்களை தவிர்த்து இதர மனைகளுக்கு அரசாணையின்படி உரிய கட்டணங்களை பெற்றுக்கொண்டு வரன்முறைப்படுத்த தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை 1, 2, 3, 4 மற்றும் 5–ல் சுட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நிபந்தனைகள்

1. அரசாணை (நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். 13.10.2017–ல் விதி எண்.7(g)(ii)–ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.
2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.
3. இம்மனைப்பிரிவில் அரசு புறம்போக்கு நிலம் ஆக்கிரமிப்பு குறித்து சம்பந்தப்பட்ட உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. மனைப்பிரிவின் ஊடே நீர்நிலைகள் அமையுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாதவாறு கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்.
5. மனைப்பிரிவின் ஊடே Tower Line, HT Line, LT Line and Power Line ஆகியன செல்லுமாயின் அவைகள் சாலையின் போக்கிற்கு மாற்றிய பின்னரே முறைப்படுத்தப்படல் வேண்டும்.
6. மனைப்பிரிவு அமையும் புல எண்களில் வழக்கு ஏதும் நிலுவையில் இருப்பது பின்னர் அறியப்பட்டால் மனைப்பிரிவுக்கு வழங்கிய ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
7. அரசாணை எண்.100 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்.01.07.2019–ல் குறிப்பிட்ட நிபந்தனைகள் பின்பற்ற வேண்டும். மேலும் அரசாணையின்படி மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு பகுதி மனுதாரரால் தானமாக சம்மந்தப்பட்ட துறையில் ஒப்படைப்பு செய்த பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
8. பார்வை 1, 2, 3, 4 மற்றும் 5 ஆகிய அரசாணைகளில் குறிப்பிட்ட நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.
9. சாலை மற்றும் பொது ஒதுக்கீடு ஒப்படைப்பு செய்யப்படவில்லை எனில் இம்மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட ஒப்புதல் முன் அறிவிப்பு இன்றி ரத்து செய்யப்படும் என்ற விபரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக அனுப்பிவைக்கப்படுகிறது.

**இணைப்பு**

மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள்.

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
நாமக்கல்.
(ஒப்பம்) 28.10.21

பெறுநர்,
வட்டார வளர்ச்சி அலுவலர்,
மோகனூர் ஊராட்சி ஒன்றியம்,
மோகனூர் வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.

நகல்

1. தலைவர்,
   இராசிபாளையம் ஊராட்சி,
   மோகனூர் ஊராட்சி ஒன்றியம்,
   மோகனூர் வட்டம்,
   நாமக்கல் மாவட்டம்.

2. Thiru.M.P.Thiruvalluvan,
   S/o.M.Peramanathan,
   F6C, CDS Regal Palm Garden,
   383, Velachery.
   Tambaram Road,
   Vijaya Nagar Velachery,
   Chennai – 600 042.

3. Tamil Nadu Real Estate Regulatory Authority
   (TNRERA).
   No:1A, 1st Floor.
   Gandhi Irwin Bridge Road,
   Egmore,
   Chennai 600 008.

4. சார்பதிவாளர்,
   மோகனூர் சார்பதிவாளர்
   அலுவலகம்,
   நாமக்கல் மாவட்டம்.
   } சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு.

5. உதவி இயக்குநர் (நில அளவை),
   நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
   நாமக்கல் மாவட்டம்.
   } சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு.

6. இருப்புக் கோப்பு